**சார்பு நீதிமன்றம், சீர்காழி.**

## S.C.40/2024

2026 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 22 ம் நாள் வியாழக் கிழமை PW5 இன் வாக்குமூலம், 1873 ஆம் ஆண்டு இந்தியசாட்சிய சட்டப் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திருமதி. S. மும்தாஜ், B.Sc., B.L., சார்பு நீதிபதி, சீர்காழி அவர்களால் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு பதிவு செய்யப்படுகிறது.

Deposition of LW7 examined as PW5

| | | |
|---|---|---|
| Date | : | 22.01.2026 |
| Name | : | ஹரிஸ் |
| Husband Name/Father Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Post | : | |
| Age | : | |

All accused present.

**<u>சாட்சி அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டு முதல் விசாரணை</u>**

நான் தற்போது தென்னாம்பட்டினத்தில் வசிக்கிறேன். நான் வாட்டன் கேன் போடும் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும் ராமலிங்கம் என்பவரை தெரியும். என்னிடம் காண்பிக்கப்படும் கைபற்றுதல் மகசிால் உள்ள சாட்சி முதல் கையெழுத்து என்னுடையது தான். 29.11.2020 ம் தேதி நானும் ராமலிங்கம்என்பவரும் குரவலூர் என்ற இடத்தில் தண்ணீர் கேன் போட்டுக் கொண்டிருந்தேன். அப்போது போலிசார் வந்து ஆஜர் எதிரிகளை கைது செய்தார்கள். காரை நிறுத்தி போலிசார் சோதனை செய்தார்கள். 2 கட்டை கழியை கைப்பற்றினார்கள் அதை நாங்கள் பார்த்ததால் எங்களிடம் கையெழுத்து வாங்கினார்கள். **அந்த கைபற்றுதல் மகசர் அ.சா.ஆ. 2 ஆக குறியிடுசெய்யப்படுகிறது.** போலிசார் என்னை விசாரணை செய்யவில்லை.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்குவிசாரணை</u>**

புகார்தாரரையும் எதிரிகளையும் எனக்கு நன்கு தெரியும். ஒரே ஊர்காரர்கள் மற்றும் உறவினர்கள். வழக்கு சம்பவம் குறித்து எனக்கு தெரியாது என்றாலும் குரவலூர் பேருந்து நிலையத்திற்கு போலிசார் மட்டும் வந்தார்கள் என்றால் சரிதான். குரவலூர் பேருந்து நிறுத்தத்தில் நான் தண்ணீர் கேன் போட்ட இடத்தில் வேறு யாரும் இருந்தார்களா என்றால் இல்லை. கைப்றறட்ட பட்ட கட்டை கழி தோராயமாக

3 அடி இருக்கும்.அது காரில் இருந்தது. வெள்ளை நிற கார். அதன் பதிவு எண் தெரியாது. கார் டிக்கியில் இருந்து எடுத்தார்கள். குரவலூர் பஸ்டப் என்பது சம்பவ இடமா என்றால் இல்லை. கட்டை கழியை கைப்பற்றிவிட்டு காவல் நிலையம் வந்து என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள் என்றால் சரிதான். நான் புகார்தாரருக்கு வேண்டியவர் என்பதால் அந்த இடத்திற்கு செல்லாமல் காவல் நிலையத்தில் தயாரிக்கப்பட்ட கைபற்றுதல் மகசரில் கையெழுத்து போட்டு விட்டு தற்போது புகார்தாாரருக்கு ஆதரவாக சாட்டிசியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. கைபற்றபட்ட தடய பொருளை நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கவில்லை என்றால் சரிதான்.

MUMTAJ Digitally signed by MUMTAJ Date: 2026.01.22 16:45:49 +0530

**சார்பு நீதிமன்றம், சீர்காழி.**

S.C.40/2024

2026 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 22 ம் நாள் வியாழக் கிழமை PW5 இன் வாக்குமூலம், 1873 ஆம் ஆண்டு இந்தியசாட்சிய சட்டப் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திருமதி. S. மும்தாஜ், B.Sc., B.L., சார்பு நீதிபதி, சீர்காழி அவர்களால் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு பதிவு செய்யப்படுகிறது.

Deposition of LW10 examined as PW6

| | | |
|---|---|---|
| Date | : | 22.01.2026 |
| Name | : | பிரவீன் குமார் |
| Husband Name/Father Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Post | : | |
| Age | : | |

All accused present.

**<u>சாட்சி அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டு முதல் விசாரணை</u>**

நான் தற்போது தென்னாம்பட்டினத்தில் வசித்து AC சம்பந்தமாக வேலை செய்கிறேன். காமராஜ் என்பவரை தெரியும். என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகசரில் உள்ள 1வது கையெழுத்து என்னுடைது தான். **அந்த பார்வை மகசர் அ.சா.ஆ. 3 ஆக குறியிடுசெய்யப்படுகிறது.** 29.11.2020 ம் தேதி 1 மணிக்கு மேல் இருக்கும் நான் வீட்டை விட்டு வெளியே வந்தேன். போலிசார் நின்று கொண்டு வரைபடம் வரைந்து கொண்டு இருந்தார்கள். அதில் சாட்சியாக இருக்க கேட்டுக் கொண்டார்கள். அதில் நானும் காமராஜும் கைகெயெழுத்து செய்தோம். போலிசார் என்னை விசாரணை செய்தமார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

புகார்தாரர் என் உறவினர் மற்றும் ஊர்காரர்கள் என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கும் எங்கள் வீட்டிற்கும் சுமார் 100 அடி இருக்கும். மன்மதன் கோயிலுக்கும் எங்கள்வீட்டிற்கும் அதே தொலைவு தான். விடியற் காலை 1 .30 மணிக்கு போலிசார் விசாரணை செய்தார்கள். விசாரணையின் போது நானும், காமராஜும் அவரது கடை அருகே இருந்தோம். எங்கள் இருவரை தவிர வேறு யாரும்

அங்கு இல்லை என்றால்சரிதான். சுமார் 4 போலிசார் அங்கு வந்து விசாரித்தார்கள். காமராஜ் கடை வீடு ஒரே இடம் தான். என் வீட்டிற்கும் காமராஜ் வீட்டிற்கும் 400 அடி இருக்கும். என் வீடு கிழக்கு பக்கம் உள்ளது. மறுநாள் காலை 11.00 மணிக்கு தான் காவல் நிலையம் வந்தோம். என்னை விசாரணை செய்து கையெழுத்து வாங்கியது சம்பவ இடத்தில் தான். சம்பவ நடந்த இடம் இருட்டான பகுதி. மன்மதன் கோயில் அருகிலேயே மின் கம்பம் உள்ளது. சம்பவ இடத்திற்கு பக்கத்தில் எதிரிகள் வீடு உள்ளது. மாரிமுத்து வீடு அஅ்கு உள்ளதுஎ ன்றால் கோயில் எதிரே உள்ளது. அவர் வீட்டு வாசலில் தான் சம்பவம் நடைபெற்றதுஎன்றால் சரிதான். என்னை விசாரணை செய்யும் போது மாரிமுத்து அங்கு இல்லை என்றால் சரிதான். வரைபடம் காவல் நிலையத்தில் தயார் செய்யயப்பட்டது என்றாலம் சம்பவ இடத்தில் நான் இல்லை என்றாலும் காவல் நிலையத்தில் கையெழுத்து போட்டு விட்டு புகார்தாரருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

MUMTAJ

Digitally signed by MUMTAJ
Date: 2026.01.22 16:45:59 +0530